செ.வெ.எண்: 02 நாள்: 01.12.2016

**ஆலங்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் பயனாளிகளுக்கு ரூ.307500 மதிப்பில் நலத்திட்ட உதவிகளை - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் மற்றும் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (01.12.2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பணிகள் மற்றும் பதிவேடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருவாய்த்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி தமிழகஅரசு வருவாய்த்துறையின் மூலம் பொதுமக்களுக்கு தேவையான பல்வேறு சான்றிதழ்கள் மற்றும் முக்கிய பணிகளை வட்டாட்சியர் அலுவலகங்கள் மூலம் மேற்கொள்ள உத்தரவிட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் ஆலங்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகள் மற்றும் பணிகள் குறித்தும் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

இதில் விலையில்லா வேட்டி, சேலை இருப்பு பதிவேடு, சொத்து பதிவு சான்று பதிவேடு, நிலமாற்றப் பதிவேடு, மின் ஆளுமை திட்டத்தின் கீழ் சான்றுகள் வழங்கும் பதிவேடு, மாண்புமிகு முதலமைச்சரின் தனிப்பிரிவு மனுக்கள் பதிவேடு, ரொக்க கணக்கு பதிவேடு, சுத்தநகல் பதிவேடு, பணப்பதிவேடு, தன் பதிவேடு, பணிப்பதிவேடு, பகிர்மான பதிவேடு, வருகைப் பதிவேடு உள்ளிட்ட பல்வேறு பதிவேடுகள் மற்றும் பதிவறை பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. மேலும் 10 பயனாளிகளுக்கு தலா ரூ.1000 என மொத்தம் ரூ.10,000 மதிப்பில் பல்வேறு உதவித்தொகைக்கான ஆணைகளும், 10 பயனாளிகளுக்கு தலா ரூ.29750 என மொத்தம் ரூ.297500 மதிப்பில் விலையில்லா வீட்டுமனை பட்டாக்களுக்கான ஆணைகளும் என மொத்தம் ரூ.307500 மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின் போது அலுவலகங்களில் உள்ள அனைத்து பதிவேடுகளையும் முறையாக பராமரிக்கவும், அனைத்து வருவாய்த்துறை அலுவலர்களும் தங்களது தொடர்புடைய பணிகளை சிறப்பாக மேற்கொள்ளவும், மேலும் பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் மனுக்களின் மீது உரிய விசாரணை மேற்கொண்டு உடனடி நடவடிக்கை மேற்கொள்வதுடன் சான்றிதழ்களை தாமதமின்றி வழங்கவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆலங்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி நிறுவனம் மூலம் செயல்பட்டு வரும் அரசு பொது இ-சேவை மையத்தின் செயல்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் மழை மானியின் செயல்பாட்டையும் பார்வையிட்டார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆலங்குடி வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் மரக்கன்றினை நட்டார்.

இந்த ஆய்வின் போது வட்டாட்சியர்கள் திருமதி.ராஜேஸ்வரி, திரு.கண்ணா கருப்பையா(நீதியியல்), திரு.சக்திவேல் (ச.பா.தி), திருமதி.காமாட்சி (வ.அ) மற்றும் வருவாய்த்துறை அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**